## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஊக்குபதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான இலங்கை முகவராண்மை நிறுவனத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து முகவராண்மையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, முகவராண்மையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

முகவராண்மையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் முகவராண்மையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால்கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல் .

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பினிவருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமங்களுடன் தொடர்பான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 65 ஆம் பந்தயின் பிரகாரம், நடைமுறையல்லாத சொத்தொன்றிற்காக பயன்தரு ஆயுட் காலம் வருடாந்தம் மீள்மதிப்பீடு செய்யாமை காரணமாக ரூபா 2,139,281 கிரயமான முழுமையாக தேய்விடப்பட்டிருந்த போதும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்தன. அதன் | 2020 ஆம் ஆண்டின் போது மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | முகவராண்மையால் பின்பற்றப்படும் கணக்கீட்டுக் நியமங்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும் |

பிரகாரம் அதன் மதிப்பீட்டு வழுவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 13,520,358 பெறுமதியான ஆராய்ச்சி உபகரணங்கள் கணக்கீடு செய்யப்படாமை காரணமாக முகவராண்மையின் சொத்துக்கள் ரூபா 13,520,358 ஆல் குறைத்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன. | 2020 ஆம் ஆண்டில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன் | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்காக தளபாடங்கள் பெறுமானத்தேய்வு ரூபா 78,609 ஆல் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்ததுடன் ஆண்டிற்குரிய ரூபா 417,590 ஆன நிர்வாகச் செலவினம் கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. இதனால் மீளாய்வாண்டின் மிகை ரூபா 496,199 ஆல் கூடுதலாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன் | மீளாய்வாண்டிற்குரிய செலவினம் இணங்காணப்பட்டு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | 2019 ஆம் ஆண்டில் தேசிய விளையாட்டு விழாவின் தடை செய்யப்பட்ட ஊக்குப்பதார்த்தை பரீட்சிக்கும் கட்டணங்கள் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்திடமிருந்து கிடைத்த ரூபா 2,000,000 வருமானமாக கணக்கீடு செய்யாமையால் ஆண்டின் மிகை அப்பெறுமானத்தினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன் | மீளாய்வாண்டிற்குரிய வருமானம் இணங்காணப்பட்டு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 717,811 ஆன மிகயொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 429,424 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 288,387 ஆன மிகையொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வதிகரிப்பிற்கு நிர்வாகச் செலவினம் ரூபா 3,111,691 ஆல் குறைவடைந்தமை பிரதான காரணமாக காணப்பட்டது.

### 2.2 விகித பகுப்பாய்வு

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது முகவராண்மையின் நடைசொத்துக்கள விகிதம் 0.24 முதல் 0.60 வரை அதிகரித்திருந்தது. அதன் பிரகாரம் முகவராண்மையின் குறுங்கால பொறுப்புக்களை தீர்வு செய்யும் இயலுமை முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2019 ஆம் ஆண்டிற்காக ரூபா 101 மில்லியனான பாதீட்டு நிதிஏற்பாடுகளின் கீழ் ஆராய்ச்சி உபகரணங்களை வழங்குதல், நிறுவுதல், செயற்படுத்துதல் மற்றும் பராமரித்தல் செயற்பாடுகளுக்காக ரூபா 59,278,500 தொகை பெறுமதியில் தனியார் கம்பனியோன்றுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது. பெறுகை செயற்பாடுகளில் காணப்பட்ட கருத்திற் கொள்ளக்கூடிய தாமதங்கள் காரணமாக 2020 ஆகஸ்ட் வரையிலும் குறித்த உபகரணங்கள் நிறுவுதல் இடம் பெற்றிருந்ததுடன் இயந்திரத்தை செயற்படுத்துவதற்காக தேவையான பயிற்சியளித்தல் இயந்திர பயன்படுத்துவதற்காக தேவையான பரிசோதனை தொடர்பாக விசேடத்துவ சேவைகளைப் பெற்றுக்கொள்வது தாமதமடைந்தமை காரணமாக அந்த உபகரணத்தை பயன்படுத்த முடியாமல் போனது. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன் | ஆராய்ச்சி உபகரணங்களை செயற்படுத்துவதற்கு தேவையான பயிற்சி அளிப்பதற்கும் பரிசோதனை தொடர்பாக விசேடத்துவ சேவைகளைப் பெற்றுக் கொண்டு தாமதமின்றி உபகரணங்களைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | முகவராண்மையால் ஆட்களுக்கான தடை செய்யப்பட்ட ஊக்குப்பதார்த்தம் தொடர்பாக 280 பரிசோதனைகளும் முன்னைய ஆண்டின் போது 276 பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது 4 சந்தர்ப்பங்கள் அதிகரித்திருந்தன. மீளாய்வாண்டில் தடை செய்யப்பட்ட ஊக்குப்பதார்த்தம் பயன்படுத்திய 06 சந்தர்ப்பங்களும் முன்னைய ஆண்டின் போது 06 உம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தன. அதற்கு மேலதிகமாக முன்னைய ஆண்டின் போது மிருகங்களுக்கு ஊக்குப் பதார்த்த பரிசோதனைகள் 07 உம் இவ்வாண்டில் பரிசோதனைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | 70 விளையாட்டுக் சங்கங்கள் காணப்பட்ட போதும் எமது நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளக்கூடிய பரிசோதனைகளின் அளவின் இடருடனான விளையாட்டுக்களுக்காக முன்னுரிமை வழங்கப்பட்டு மேற்கொள்ளப்படுகின்றன. | அதிகளவு போட்டிகளையும் சகல விளையாட்டு சங்கங்களையும் மேவுகை செய்யக்கூடிய வகையில் மாதிரி தெரிவு செய்யப்பட்டு தடை செய்யப்பட்ட ஊக்குப் பதார்த்த பரிசோதனை தொடர்பில் விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (இ) | பாடசாலை மாணவர்கள், விளையாட்டு உத்தியோகத்தர்கள், பௌதீக உடற் பயிற்சி பயிற்சியாளர்கள் மற்றும் பெற்றோர்கள், விளையாட்டு பயிற்சியாளர்கள், விளையாட்டு வீர வீராங்கனைகள் மற்றும் பெற்றோர்கள், விளையாட்டுடன் அண்மித்த தரப்பினர் ஆகியோருக்காக வீர வீராங்களைகளின் பொறுப்பு மற்றும் கடமைகள் தடை செய்யப்பட்ட ஊக்குப் பதார்த்த பாவனையின் பாதகமான விளைவு, போதைப்பொருட்களை கட்டுப்படுத்தும் செயற்பாடு, தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் முறைகள், தவிர்க்ககூடிய முறைகள், உலகலாவிய போதைப் பொருள் எதிர்ப்பு நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக அடிப்படை விழிப்புனர்வு போன்ற விடயங்கள் தொடர்பில் கவனத்தை செலுத்தி 54 மாநாடுகள் மற்றும் அறிவூட்டல் நிகழ்ச்சிகள் மீளாய்வாண்டில் நடாத்தப்பட்டதுடன் அதற்காக 3,823 பேர் தொடர்பு படுத்தப்பட்டிருந்ததுடன் அதற்கு ஒத்தாக, முன்னைய அண்டில் 72 நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக 2,268 பேர் பங்கு பற்றியிருந்தனர். முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் | இணங்குகின்றேன். | விளையாட்டு வீர வீராங்கனைகள் மேவுகை செய்யப்படும் வகையில் தடை செய்யப்பட்ட ஊக்குப் பதார்த்தம் தொடர்பாக அதிக மாநாடுகள் மற்றும் செயலமர்வுகளை நடாத்துவது தொடர்பில் முகாமைத்துவத்தின் விஷேட கவனம் செலுத்த வேண்டும். |

நிகழ்ச்சிகளை நடாத்தும் அளவு 18 இனால் குறைவடைந்திருந்த போதும் அதில் பங்குபற்றியோரின் எண்ணிக்கை 1,555 ஆல் அதிகரித்திருந்தது.

## 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2014 ஆம் ஆண்டிலிருந்து வெற்றிடமாக காணப்படும் 2 பணிப்பாளர் பதவிகள், 02 உதவிப் பணிப்பாளர் பதவிகள் மற்றும் 01 சாரதி பதவி மற்றும் 2019 ஆம் ஆண்டில் காணப்பட்ட 02 முகாமைத்துவ உதவியாளர்களை நிரப்புவதற்காக் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 02 பணிப்பாளர் பதவிகள், 02 உதவிப் பணிப்பாளர் பதவிகள் என்பவற்றிற்காக 2016 ஆம் ஆண்டு ஆட்சேர்ப்பு விண்ணப்பங்கள் கோரப்பட்ட போதும் அதற்காக பொருத்தமான தகைமையுள்ள விண்ணப்பதாரிகள் முன்வராத காரணத்தினால் ஆட்சேர்ப்பதற்கு முடியாமல் இருந்தது. ஆட்சேர்ப்பு நடைமுறை திருத்தம் செய்வதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சாரதி பதவி மற்றும் முகாமைத்துவ உதவியாளர் பதவி இரண்டிற்கும் எதிர்காலத்தில் ஆட்சேர்ப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | வெற்றிடங்களாக காணப்படும் பதவிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான தொகைகளுக்கிடையில் 16 செலவின விடயங்களில் 11 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் விலகல்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடானது வினைத்திறனானதொரு முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்படாமை அவதானிக்கப்பட்டது | பாதீட்டு நிதி ஏற்பாட்டை உரிய வேலைகளில் திறைசேரியிடமிருந்து கோரப்பட்ட போதிலும் நிதி ஏற்பாடு விடுவிப்பு திறைசேரியால் உரிய நேரத்தில் வழங்கப்படவில்லை. | பாதீட்டு மதிப்பீடு சரியாக தயாரிக்கப்பட்டு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு சாதனமாகப் பயன்படுத்தப்பட வேண்டியதுடன் விலகல் தொடர்பாக உரிய நேரத்தில் கருத்திற் கொள்ளப்படல் வேண்டும். |